மோக்ஷானுபூதிமாலை.

இஃது

தூத்துக்குடி, முத்துநாயக்கர் தெரு,

மகா-ள-ள-ஸ்ரீ

S. நல்லபெருமாள் கவிராயரவர்களால்

இயற்றி

தூத்துக்குடி;

சுப்பிரமணியவிலாச அச்சியந்திரசாலையில், புரொப்ரைட்டர்

K. சிவசூரியநாராயண பிள்ளையவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

1911ளு மேமீ

உ

மோக்ஷானுபூதிமாலை.

இஃது

தூத்துக்குடி, முத்துநாயக்கர் தெரு,

மகா-ள-ள-ஸ்ரீ

S. நல்லபெருமாள் கவிராயரவர்களால்

இயற்றி

தூத்துக்குடி,

சுப்பிரமணியவிலாச அச்சியந்திரசாலையில், புரொப்ரைட்டர்

K. சிவசூரியநாராயண பிள்ளையவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

1914௵ மே௴

1914 MADRAS

180
181.A8

பிழை திருத்தம்.

பக்கம்	பாட்டு	வரி	பிழை.	திருத்தம்.
5	63	2	கடனுக்கே	கடனுனக்கே
8	114	1	அன்றவாந்த	அன்றலர்ந்த
ஷை	118	1	வேண்டிநின்ற	வேண்டிநின்ற
ஷை	120	1	என்தோற்றம்	என்தோற்றம்
9	129	1	மறறு	மற்று
ஷை	141	1		மத்தியிலே
11	163	2		பாபாப்பாய்
12	178	2	கொளுததல	கொளுத்தல்
,,	180	2		சார்வதற்காய்
22	37	1	அஸ்சவ	அசைவை
23	53	1		பற்றிவெறி
,,	54	2		தாய்போ

உ
ஓம்

மோக்ஷாநுபூதிமாலை.

காப்பு.

சாக்ஷாத்து காரத் தனிப்பொருளான் சந்நிதியில்
மோக்ஷாநு பூதி மொழியவே—காட்சியற்ற
வெட்டவெளி வேதாந்த வீதியிலே வீற்றிருக்கும்
செட்டியார் தாளென் சிரம்,

நூல்.

இருக்கு எசுர்சாமம் எரா ரதர்வணமும்
அருவருப்பாம் நின்னடியர் ஆபாச மென்றுரைத்துக்
கோப அருவருப்பாற் கொப்புளித்த எச்சிலென்றும்
தாபப் பெயர்ச்சியென்றும் சாந்தா யெனக்குரைத்து
நின்ற இடம்நகர்ந்த நீள்குறிப்பே வேதமென்றும்
நின்ற இடம்நின்றால் நிகராரு மில்லையென்றும்
கன்றும் அவசரத்திற் காணுகின்ற துக்கமெல்லாம்
கன்று அவசரத்திற் கர்ணு வெனவுரைத்துக்
கனவு நனவுரைத்துக் காணச் சுழுத்தி சொல்லி
கனவுதுரி யாதீத நாட்டம்வரை நாடவைத்து (5)
எல்லாமென் சந்நிதியில் என்றுமன்று ஆடவைத்து
நில்லா மனக்குரங்கை நேசனெனத் தானமைத்து
வைத்த பெருந்துயரம் வானகத்தும் வையகத்தும்
அத்தா தவலோகம் எங்கும் அகப்படுமோ
எல்லாச் செயலுமெந்தன் எண்ணத்தால் வந்ததெனச்
சொல்லாமற் சொன்னவுனைத் தொன்றுதொட்டு நானடிமை
கண்டுகண்டு நின்ற கருதரிய மாதவமே
அண்டி அடியேன் அரும்பிழையெ லாம்பொறுத்துக்
கொண்டணைத்த ஞானக் குதுகுலமே வேதமும்
என்றழைக்கப் பெற்றவொரு எந்தனிரு கண்மணியே (10)
ஆதி அநாதியாய் அந்தம்நடு வில்லாதாய்ச்
சோதியாய்த் தானாய்த் துளிர்த்த ஒருசுடராய்

வாதியாய் வாதமில்லா மன்னனாய் மாதவமாய்
ஆதலனாய் மண்ணாய் அகன்ற பரிபூரணமாய்
நீக்கமும் சொச்சமின்றி நீழ்விசும்பிற் கப்பாலாய்ப்
பார்க்கஎட் டாவெனவே பகர்ந்த பரந்தாமன்

சாத்திரத்தைக் கற்றறிந்து சமயவுருப் போட்டெழுந்து
ஆத்திரத்தாற் பேசவரும் அற்பருக்கும் எட்டாதான்
கண்ணிருந்தும் காணானே காதிருந்தும் கேளானே
விண்ணிருந்தும் பேசா விமலன் பெரியவனே

என்னப்பா என்கண்ணே எந்தன் இருதயமே
நின்னைப்போ லுற்றதுணை நீணிலத்தில் நான்காணேன்
சொந்த அடிமையைநீ சோதித்தாற் றாங்குவனோ
எந்தை கிருபை இருக்கப் பயமெனக்கேன்

சாதி சமயமெல்லாம் சத்தவுருத் தோற்றமென்று
போதித்த சற்குருவே (நின்) பொன்னடியை நான்மறவேன்
பெண்டுபிள்ளை சுற்றமெல்லாம் பெரியபர மென்றெனக்கு
அண்டி அருள்கொடுத்த அத்தா உனைமறவேன்

பந்தமெலாம் பந்தமெனப் பந்தமணு காதவகை
தந்த சுயங்கருணைத் தாதா நமஸ்காரம்
இந்த உலகிருப்பின் எல்லை யெனக்குரைத்துச்
சிந்தைச் சிறைகெடுத்த தேவே நமஸ்காரம்

எங்கும் நிறைந்தவனென் றெ[illegible]ரும் சாற்றுமுனை
அங்கமதிற் காண்பதுபோல் ஆசையறக் காணேனே
என்னைப்போல் மாணவர்கள் எத்தனையோ பேரிருப்பார்
உன்னைப்போல் ஆசிரியர் ஒருவர் கிடைப்பாரோ

இலக்கியமும் நீயே இலக்கணமும் நீயேயென்
றலக்கழிந்து நின்[illegible]எற்கு அறிவித்த தாதாவே
துன்பம் அணுகாச் சுகங்கொடுத்த மாபெருமை
இன்பப் பெருக்கே வெளியே னடைக்கலமே

என்னைச் சடலம்விட்டு எங்கேனும் போகவிடா
துன்னைத் தொடர்ந்துபற்ற உயர்ந்தவரம் நீகொடுப்பாய்
எல்லாச் சிநேகமுநீ செய்த சிநேகமென
நல்லோய் நினைந்துருகி நாட்கழிக்கச் செய்வாயே

நாற்றப் புழுக்கூட்டை நான்சுமந்து நாளலுத்துச்
சோற்றுக் கிரைதேடும் தொல்லையெல்லாம் தூரவைத்துக்

காற்றுச் சடலமிது கண்கட்டாம் நாடகத்தைப்
போற்றித் திரிந்தலைந்த போக்கெல்லாம் போக்கடித்து

என்னை அறிவுதையத் திருத்தி இறைகுடியாய்
மன்னி இருந்தென்று மாசெல்லாம் தீர்த்தருள்வாய்

ஊர்சுற்றும் வேலையெல்லாம் உதரி உனதுடைய
பேர்சுற்றும் வேலைப் பெருக்கைப் பெருகவைப்பாய்

கற்றறிந்தோ னென்னும் கருவம்அடி யோடொழித்து
மற்றொன்றுங் காணு மவுனியெனக் காணவைப்பாய்

சேயைப்போற் பேசாச் செருக்கெனக்கு நீகொடுத்து
நாயைப்போ லேபுசித்து நானிருக்க நீயருள்வாய்

துயரம் அணுகாச் சுகமே ருவையடுத்தும்
மயக்க மணுகுமென்றால் வாதைபொறுக் கேன்கழுதை

செப்ப முடியாத செல்காலம் அத்தனையும்
அப்பனுக்கு நானடிமை அல்லவென்றார் சொல்வரிதை

வயிற்றுப் பெருக்கால் வருந்துயரத் தால்வருந்தி
அயர்த்து மறந்தடியேன் அயலார் பொருள்கவர்ந்து

வரும்மனித வர்க்கமெல்லாம் மா[illegible]ற்றோய் நீயெனக்கண்
டிருக்க முடியாமல் இதம்பேசி [illegible]கழித்து

வாழ்த்தி வாங்கொடுத்து வ[illegible]தொருக் காளாகிப்
பாழ்த்த துயரமெல்லாம் பத்துநூ றாயிரமாய்ப்

பெருக்கிக் கொடுத்தென்னைப் பேய்போற் சுழலவைத்தாற்
பொறுக்க முடியுதில்லைப் பூரணா கண்பாரும்

தகட்டைக் கொணர்ந்தொருவன் சாற்று[illegible]ி போம்படிக்குப்
பகட்டும் மொழியிடத்தும் பட்டிழன்று நிற்பேனே

சோதிடத்தைப் பாரெனவே சொல்லிவரு வானொருத்தன்
மாதிடத்தோ டோதி மயங்கித் தவிப்பேனே

என்ன கவலையிது எத்தனைநாட் டுன்பமிது
இன்னம் இருப்பதென்றால் எச்சுக் கிட[illegible]லேவா

தன்னந் தனியே தனிக்கும் வனந்தனிலே
என்னைக் குடியிருத்தி யேகாந்த மாக்கிவைப்பாய்

பல்லூழி காலம் பயின்ற த[illegible]யனால்
தொல்லையின்றிக் கண்டும்[illegible]ன்றும் தொல்லைநிற்கக் காரணமேன்

தொல்லைதொலைத் தென்னைச் சுகாதீத மாமலையின்
எல்லையிலே வைத்தென் இதயங் கவர்ந்துகொள்வாய்
    சச்சடியை விட்டுத் தனிக்கும்வரம் நீகொடுப்பாய்
    கொச்சைமனப் பேப்பயல்கள் கூட்டமணு காதபடி
மெச்சும் துறவறத்தோர் மேவஅருள் நீகொடுத்து
அச்சம் தகர்த்தடிமை யாகவே ஆண்டுகொள்வாய்
    பணத்தால் வருந்துயரம் (என்னைப்) பார்க்கா வரமருளிக்
    கணத்திலும் உன்னையன்றிக் காணாச் செயல்கொடுத்துப்
பிணக்கு மணுகாது பின்னு முன்னுங் காணாது
மணக்கும் படிஉனது மகிமை பிறங்கவைப்பாய்
    என்னோர முன்னை யிறைஞ்சித் துதிக்கவைத்துக்
    கன்னெஞ்சை வாரிக் கயத்தி லெடுத்தெறிந்து
பொன்னடியைப் போற்றிப் புனிதமுடன் றாங்கவைத்து
என்னடியை விட்டெளியேன் ஏகாச் செயல்கொடுத்துத்
    தருமம் தழைத்திடவும் சத்தியங்கள் நின்றிடவும்
    பொறுமை உரைத்திடவும் புந்திநின்று காப்பாற்றும்
அதிகம்உ[illegible]ரை பேசாமல் அகமுறையும் நின்னோடு
மதியிருந்து [illegible]பசி வயங்கும்வரம் நீகொடுப்பாய்
    எத்தாலும் துன்பம் இடையூ றெனக்களித்தால்
    அத்தா இனிப்பொறுக்கேன் ஆ[illegible]றேன் பெருந்துயரம்
நித்திரையிற் றோன்றுத நீஷச் சடல[illegible]து
சுத்த நனவதனிற் றோன்றிநிற்கும் தோ[illegible]மென்ன
    பழக்கம் பழக்கமென்றும் பாசபந்தக் கூட்டமென்றும்
    வழக்கம் வழக்கமென்றும் வாழா திருப்பேனே
மந்த மதியால் வருந்துயருக் காளாகிச்
சிந்தை தினமயங்கித் திகைத்தலரி நிற்பேனே
    பிள்ளையென்றும் பந்துவென்றும் [illegible]பாழலாஞ்சேரதனிற்
    கள்ளமன தைச்செலுத்திக் கரைந்துருகி நிற்பேனே
[illegible]ன்தோற்ற மத்தனையும் எங்கோன் எரித்தருளி
உன்தோற்றத் துள்ளே உருகும்நிலை நீயுதவி
    மன்னி அருள்பெருகி வான்தோற்ற மாபெருக்கில்
    என்னை நிலைநிருத்த எந்தாய் இதுசமயம்
சமயமெல் லாம்கடந்த சத்தமற்ற சாமியுன்னை
அமைதியுறக் கண்டாற் ககப்படுவ தல்லாமல்

என்போற் புலப்பமுறும் ஏழைகளுக் கெட்டுவையோ
அன்பா லுனையிழுத்தால் அப்பஎங்கு தப்புவைசொல்

எத்தாலும் தர்க்கமெனை யெட்டா நிலைகொடுத்த
பித்தா பிறைசூடி (நின்) பேரருளை நான்மறவேன்

பித்தன் பிறைசூடும் பெம்மானென் தெய்வமெனக்
கத்துமவ ரெல்லோரும் காண்பதுவும் ஓர்நாளே

சத்தம் அடைத்தனது சாந்தமார் மேடைகண்டு
சித்திரம்போற் றூங்கியுன்னைச் சேர்வதுவும் ஓர்நாளே

எத்தனையோ கோடிஜென்மம் எடுத்தலுத்து நாயடியேன்
அத்தாநின் பேரருளை அடைந்தே னடைக்கலமே

தூக்கம் மரணமெனச் சொன்னவொரு சொல்லைநம்பித்
தூக்கம் வருகுமுன்னே சொன்னேன் துயரமெல்லாம்

ஆக்கம் எனக்கருளி அந்தரங்க நன்மைதந்து
காக்கக் கடனுக்கே கற்கண்டே சொற்சுவையே

இன்னமுதே வான்தேனே யென்னுயிரே நன்மருந்தே
சொன்னவொரு சொல்லாற் சுகங்கொடுத்த நற்கடலே

சுகமும் சுகத்தெளிவும் துக்கநிலை அத்தனையும்
அகமுறையும் நீயெனவே அறிந்தேன் அகப்பொருளே

ஆரும் தெரியா அருளை அடி யேற்களித்த
பேரறிவாம் ஞானப் பெருக்கே சுக[illegible]லையே

சுகமலையே விண்ணே சொரூப[illegible]ல்லாதவொன்றே
அகமுமலை யாதபடி ஆண்டுகொண்ட மாமேரே

வானடங்க மண்ணடங்க வாரிமலை தானடங்க
நானடங்க நீயடங்க நற்றா மரைகொடுப்பாய்

நற்றா மரைகொடுத்துன் நற்பதத்திற் றூங்கவைத்து
முற்றாத பேரின்ப முடிவைக் கொ[illegible]த்தருள்வாய்

பெருஆராய்த் தான்திரண்ட பேரிழவா[illegible] சஞ்சலங்கள்
அரைய[illegible]ர்ந்த நித்திரையி லங்கே வராதென்ன

நானே படுத்தவுடன் நல்வா சனைக்[illegible]ட்டம்
தானே படுத்தெழுந்தாற் றுஞ் [illegible]ழுவதுவும்

ஒன்றின்பின் ஒன்றாய் உலாவி எனையி[illegible]ந்து
நின்று அரைகருவி நீள்திருகை யைப்[illegible]ோலும்

தேய்த்துக் கரைத்தெனையே தெருத்தெருவாய்க் கொண்டலைத்து
வாய்த்த சமயமெல்லாம் வாடாமல் வாடவைத்துப்

பல்கவலைக் காளாக்கிப் பாடாய்ப் படுத்திவைத்துச்
சொல்ல முடியாத் துயரம் பலகொடுத்து
நெருப்பிலே போட்டெடுக்கும் நீளிரும்பு போலவென்னை
விருப்பு வெறுப்பிற்கே வெகுநா ளடிமையெனக்
காட்டிக் கொடுப்பதுவும் கண்கலங்கி நான்கழுதை
மாட்டித் துயரமுறும் வாதையெல்லாம் நீயறிவாய்
உனக்கு ஒழித்தசெய்கை உண்டோ இதயமதில்
எனக்கு ளிருந் தெல்லாம் இசைக்கும் இறையவனீ
இந்தத் துயரமெல்லாம் என்னை அணுகாதபடி
பந்தப் படுகுழியைப் பாழாக்கி முத்திரைவை
சின்முத்தி ராங்கச் சிறப்பைச் சிறக்கவைத்து
உன்முத்தி ராங்கத் தொதுங்கஇடம் நீகொடுத்து
நான்வாழ நாய்வாழ நானிலத்து மாக்களெல்லாம்
தான்வாழ நீயே தழையச் செழிக்கவைப்பாய்
வந்தஜென்மம் பூரா வரும்ஜென்மம் அத்தனையும்
எந்தையடித் தொண்டனென எவரும் அறிவாரே
நின்னடிக்கே தொண்டுசெய்ய நெடுநாள் நினைவுவைத்து
நின்னடியைக் கண்டுகொண்ட நீ[illegible]செயலை நான்மறவேன்
மறவேன் மறதிகொண்ட மா[illegible]தவ[illegible]ன்னை வைதாலும்
துறவோய் உனைநினைந்தாற் சு[illegible]ண் சுகப்பொருளே
அம்பலங்கள் தோறும் அலையாச் செயல்கொடுத்துத்
தம்பலத்தில் நின்றெளியேன் சாகா வரம்தருவாய்
அறிந்த நிலையில் அடியேனைத் தானமர்த்தி
யிருந்த நிலையைவிட்டு என்னை[illegible]சை யாதபடி
வைத்து எனையிருத்தி வானகமும் [illegible]யகமும்
சுத்தம் படியுனது செயலைச் செழி[illegible]கவைப்பாய்
பார்க்குமிடம் எல்லாம் (உன்[illegible]ப்) பார்ப்பதே அல்லாமல்
ஓர்பொருளைக் காணேனென் [illegible]ணர்வி லிருப்பவனே
சித்த சிதாகாயத் திருநடனம் [illegible]ட்டி[illegible]வைத்த
தெத்தனைநாள் எண்ணிஎண்ணி யெ[illegible]யேன் புலம்புவது
புலம்பம் தவிர்த்தெனது பு[illegible]தியில்நின் றாடுகின்ற
தலத்தி லிருத்தியென்னைத் தானணைத்து ஆண்டுகொள்வாய்

ஒன்பது வாசலுள்ள உப்பிருந்த பாண்டமிது
துன்பமிது துன்பமெனத் தோன்றும்வரம் நீகொடுத்துச்

சோற்றாற் சமைத்தெடுத்த தூராக் கிடங்கிதனைப்
போற்றித் திரிந்தலைந்த புத்தியெல்லாம் போக்கடித்து

மாற்றி யுயர்ந்தஉன்னை மண்ணகத்தும் வானகத்தும்
சாற்று முயிரனைத்தும் தங்குமுனைச் சாரவைப்பாய்

என்ன அதிசயங்காண் இதுபோல்நான் கண்டதில்லை
என்னிடத்தில் நானே இறைகுடியைக் கண்டேனே

கண்டேன் துயரமெல்லாம் கைவிட்டேன் விட்டவுடன்
எண்டிசையும் நானாய் இருந்தநிலை சத்தியமே

சத்தியமாய் உண்மையிது தா[illegible]கண்ட சாட்சியிது
நித்தியமும் நம்மவரின் நேம நிலையிதுவே

நேமமிது வாயிருக்க நெறியறியா மாக்களெல்லாம்
வாமி உனதருளால் வருவார் ஒருகாலம்

வந்தாருக் கன்றி வருமோ உனதுசுகம்
எந்தாயுன் பேரருள்போ லில்லையெவர்க் கும்சுகமே

கல்லைவைத்துச் செம்பைவைத்துக் கடவுளெனப் பூசைவைத்துச்
சொல்லை உரைத்துரைத்துச் சொற்பொருளைக் காணாமல்

வாழா மயங்குகின்ற மாக்களுமே உன்னுடைய
தாளாம் பதாம்புயத்திற் சஞ்ச[illegible]க்கக் [illegible]ாண்பேனோ

எல்லாரும் என்போல ஈடேற என்[illegible]டைய
கல்லோய் நினைவுகண்டாய் நாதாந்தா க[illegible]ண்பாரும்

பாரும் கிருபைவையும் பாரளந்[illegible]தான் தேவர்முதல்
ஆரும் தெரியா அமலா பரஞ்சோ[illegible]தி

என்னை அறிவித்த இறைவன் பெரு[illegible]மைதனை
என்ன எனவே யெடுத்துரைப்பேன் [illegible]பைங்கிளியே

கைகால் முகங்களுடன் காணும் [illegible]வையவங்கள்
[illegible]லம் போமெனவே நம்மைநா[illegible]க் குக்கொடுத்தான்

சாதல் பிறத்தல்ரண்டும் சங்கற்ப மென்[illegible]தனின்
சூதை யெடுத்துரைத்தென் தொல்லையெ[illegible]லாம் தீர்த்தபிரான்

அசைவும் அசையா அமைதி உபசாந்தம்
இசையக் கொடுத்தெனையே யின்றும்என்றும் ஆண்டபிரான்

வபா . . க பருத்த சரீரயிதைத்
து . . சுமந் . ளை உ . சோம்பேறி மாகழுதை

இத்தலை . பார இழவெடுத்த கூட்டமெல்லாம்
ஆத்தனையும் . லவென் றுண்டுகொண்ட மாதவத்தான்

. ாசற்ற மாவெளிய . வாதையற வைத்தெனையே
ஆசையெல்லாம் மாய்த்த அகன்றபரி பூரணத்தான்

அன்பருளத் தாமரையில் அன்றலர்ந்த மாமலர்போல்
இன்பமுடன் வீற்றிருக்கும் எங்கோன் விரிந்தவனே

எல்லா மதத்தினிலும் எல்லா ரிதயத்திலும்
நல்லான் நிறைந்தே நடுநின்ற நாயகன்காண்

சொல்லான் மனத்தாற் றுதிக்கப் ப . ாதவன்காண்
எல்லாம் அறிந்தவன்காண் எங்கும் இருப்பவன்காண்

கண்ணுண்டோ மூக்குண்டோ கலந்துசொல வாயுமுண்டோ
விண்ணுண் டவனருளை வேண்டிநின்ற தொண்டருக்கு

வேண்டிநின்ற தொண்டருக்கு வேதனையெல் லாமகற்றி
ஆண்டவனை தன் பாதத் தணைக்கும் அகமுகத்தான்

முகத்தான் பெருமைதனை முக்காலும் எக்காலும்
வகைபிரித்துச் சொல்வதற்கு வாயனந்தம் வேண்டுங்கொலோ

மன . தை உடைய மனிதரெல்லாம் என்தோற்றம்
மை . வினிலும் நீயவரைக் கீழ்ந் . ரைசெப் பாதேயென்றான்

. ர்க்கந் தொகுப்பாரும் சத்ராதி ஆ . ரும்
சொற்பெருமை கொண்டாரும் தொழுமெ . ன வேயுரைத்தான்

குரங்குப் பிடியும் குருபூனை யின் . டியும்
உரங்கும் படிக்கென் றுரைத்தான் . பெரியவனே

மடத்தை யறுத்து மதிவேளைச் சுட்டெ . த்து
இடத்தி லிருத்தியெனை ஆண்டான் . ரியவனே

என்கவலை யெல்லாம் எகளரித்த . றை
தன்கவலை சாகஅருள் சாதித்த . ணைவியான்

பல்லா யிரமதத்தர் பல்லா யிரங்கோடி
பல்லா யிரமனிதர் பல்லா யிரவிதமாய்

விதத்துக் கொருகுருவாய் விளங்கியன்று யின்றுநின்று
விதத்துக் கொருசுருதி விளக்கியவர் தன்கருத்தை

பதத்தைப் பகுத்துரைத்தும் பார்நிறைந்தோன் மாய்னென்றும்
இதத்தைக் கொடுப்பதற்கெம் பெருமான் பெரியனென்றும்

பெரியான் சிவமெனவும் பேரின்ப முத்திசல்க
உரியா னவனெனவும் உரைக்க ஒருசார்பார்

மற்று மொருசார்பர் வன்கயிலை மாமலையில்
உற்ற பரதேசிக் கோர்செயலு மில்லையென்றும்

வனத்தில்ரிசி பத்தினியை மாறுவே டம்புனைந்து
கனம்அறியா மற்சேர்ந்த காமக் கொடியனென்றும்

அல்லா பெரியனென்றும் மோட்சம் அவனதென்றும்
இல்லாத பேய்வணக்கம் எல்லாம் இடரெனவும்

படைத்த படைப்பையெல்லாம் பரமனெனக் கைகூப்பும்
தடிய ரெனவுரைத்துத் தர்க்கமிடும் ஓர்சார்பார்

ஜகத்திற் பெரியான் ஜகரட் சகன்கிறீஸ்து
மகிமை அவர்க்கலது மற்றவர்க்கு வாய்ந்திடுமோ

எங்கள் குருநாதன் எங்களுக்குத் தந்தமறை
தங்க எழுத்தாலே தந்ததெனத் தர்க்கமிட்டும்

இடையன் மடையனென்றும் எப்போதுங் காமியென்றும்
தடியன் கிருஷ்ணனென்றும் சாமியவ னல்லவென்றும்

தன்தன் மதமே சரியான வேதமென்றும்
பின்னவர்கள் சொல்வேதம் சுத்தப் பிழையெனவும்

ஒன்றைஒன்று தானழிக்க ஓயாத காலமெல்லாம்
நின்றுநின்று பாடுகொள்ளும் நீள்செயலுக் கோர்சாட்சி

வேண்டுமோ எந்தன் விமலா பரஞ்சோதி
ஆண்டுகொண்ட மாமேரே அத்தனைக்கும் நீசாட்சி

சாட்சியாய் நீயிருந்து தண்கால மாமனைபோற்
காட்சி கொடுக்குமுனைக் காண்பா ரொருகாலம்

காண்பா ரொருகாலம் கண்டவ[illegible] நாதல்சேர்ண்டு
பூண்பா ருரையிரங்தே போவார் ஒருகாலம்

இக்க[illegible] இருக்கும் இவர் மந்திரிமேல
இத்தனைபோ வாதம் எனக்குவரு காதரிது

சுத்தா சுகபோதா சுகாதீதப் பேரொளியே
அத்தா அமலா அடியேன் அபயமையா

அபயம் அபயமென்றேன் ஆரணனே பூரணனே
உபய சரணளித்தென் உள்வினையைக் காயவைப்பாய்

வைப்பாய் உனதுடைய மாதொண்டர் மாமடிமேல்
வைப்பாய் எனையிருத்தி வாதை வதைபடவே
உன்னைத் துதித்தடியேன் உன்செயலை விண்டுவிண்டு
உன்னைப் புகழ்வதல்லால் ஒன்றும்மதிக் கேன்கழுதை
மதியேன் பிறரிடத்தும் வார்த்தைசொல வாயுமில்லை
அதிகாரி நீயென் றறிவித்தேன் அந்தரங்கம்
அந்தரங்கச் சிம்மா சனத்தமர்ந்த ஆண்டவனீ
அந்தரங்க முன்னையன்றி ஆர்க்குரைப்பே னாண்டவனே
நெஞ்சறிவாய் நாயேன் நினைவறிவாய் என்னுடைய
வஞ்சப் புலக்கூட்ட வஞ்சமெல்லாந் தானறிவாய்
தஞ்சமில்லைத் தஞ்சமில்லை நீதவிரத் தஞ்சமில்லை
அஞ்சலென்றோர் வார்த்தைசொல்லி ஆதரித்தா லாகாதோ
ஆதரிக்க உந்தனக்கு ஆர்தயவு வேண்டுங்கொலோ
மாதவமே மாதேவே மாதயவைத் தான்கொடுப்பாய்
சும்மா இருக்குஞ் செயலையெனக் குக்கொடுத்துப்
பெம்மான் உனதுடைய பேரருளை நாட்டிவைப்பாய்
நாட்டில் நவநவமாய் நாட்டியங்கள் காண்பதெல்லாம்
ஆட்டிவைக்கும் உன்னுடைய அருளென் றறியவைப்பாய்
…ன் சிதாகாய என்னுடைய தோற்றம்தில்
எந்தை யருமைதே யெனைப்பாட வைத்தவன்காண்
பாடும் பதமும் பதப்பொருளு மாயிருந்தே
ஆடி யமர்ந்தே அமைதிபெறும் நற்றவத்தான்
சொல்லிறந்தார் தங்கள் சுகந்தமலை மேலிருந்தே
அல்லலெல்லாந் தீர்ப்பான் அவனுக் கவனிகரே
இந்தச் சரீரம் இதுநழுவிக் கொள்ளுமுன்னே
அந்தப் பெரியவனை அண்டிப் பிழைப்பீரே
பிழையும் புவியோரே பித்தனுரை யென்றிகழ்ந்தால்
பழைய வினைப்பயனால் பலகாற் றுயரடைந்து
சென்றுசென்று நின்றுநின்று தீராப் பிறப்பதனில்
நின்றுநின்று எய்த்தெய்த்து நீள்துயருக் காளாகிச்
சஞ்சலத்தால் வாடிச் சலனமடை வீரெனவே
வஞ்சனைக ளின்றி வழுத்தினேன் மாக்களுக்கு

நல்ல மனிதர்களும் நற்குணமில் லாதவரும்
அலைவல் அமர்ந்து அடங்குவதும் ஓர்நாளே
மனிதவர்க்க மெல்லாமே மாசற்றோய் உன்னுடைய
இனிய சரணதனில் இருப்பார் ஒருநாளே
மனுவாய்ப் பிறந்தவர்கள் மாடாடு நாய்குரங்காய்
இனிப்பிறப்ப தில்லையென்றே இசைத்தான் எழிற்பரனே
சர அசர வர்க்கமுதற் சாரும் விலங்கனைத்தும்
பரபரப்பாய் மாறிநின்று பாவிப்பார் பாவனையால்
மக்க ளுருவெடுத்து மக்களாய் மா[illegible]நின்று
இக்கட் டறுவரென இசைத்தான் [illegible]ருநாதனே
இந்தவகை அத்தனையும் நான்கண்டும் நானறிந்தும்
சிந்தை தடுமாறித் திகைத்து மயங்குவனே
முன்னடைந்த தொண்டர்தமை முற்றும்எண்ணச் சாத்தியமோ
பின்னடையும் தொண்டர்தங்கள் பெருமை எளிதாமோ
எண்ணுக் கடங்கா இவர்கூட்டம் அத்தனையும்
விண்ணுக் கடங்கா வெளியிற் கலந்துகொள்ளப்
பட்ட துயரைஉன்னிற் பாரும்விண் ணுங் கொள்ளாது
அட்ட திசைப்புவனம் அடங்கலும் ஏற்காது
பூலோகச் செல்வமெல்லாம் புன்மை மலமெனவே
காலால் மிதித்ததனைக் காரியுமிழ் எச்சிலென
வாந்தி அருவருப்பால் வந்தஒக் காளமெனக்
காந்த லெடுத்தலவோ கண்டார்நின் பொன்னடியை
இத்தனை போகசெல்வம் எல்லாம் அருவருத்து
அத்தாநின் பொருளில் ஆசைவைக்கக் காரணமேன்
எல்லாச் சுகமும் இழவெடுத்த துக்கமுடன்
நல்லாய் பொதிந்[illegible] நன்றாகக் கண்ட[illegible]வோ
கண்டதினா[illegible]லா கசடை உதறிவிட்டுத்
தெண்டனிட்டு நின்றாருன் செந்தா மரைப்பதத்தில்
தாரித் திரக்கோலம் தாட்சி உபசாந்தம்
பாரதனிற் கை[illegible]ந்தல் பாலர் விருத்தர்நிசை
பேயரொடு உன்மத்தர் பித்தர்குணம் அத்தனையும்
நாயைப்போல் மானமின்றி நானிலத்தில் நின்றார்கள்

சோற்றுக் கவலையுண்டோ சோம்ப லவர்க்குமுண்டோ
ஆற்றுக் கவலையுண்டோ ஆர்தயவும் வேண்டுவோரு
தருவான் கொடுப்பா (னெனும்) தண்டாவும்வம்புமுண்டோ
இருநிதிகள் தங்களுக்கு இல்லையெனும் தோற்றமுண்டோ
பிள்ளைக் கவலையுண்டோ பெண்டாட்டி தன் கவலை
கொள்ளி நெருப்பதுபோற் கொளுத்தல அவர்க்குமுண்டோ
ஒன்றையும் காணா உயர்ந்தமண்ட லாதிபதி
அன்று பிறந்த அருஞ்சிசுவும் போலாகி
ஞானியர்க ளெல்லாம் தடுவு கழுவாமற்
றானிருக்க நாயுமந்தத் தன்னிலையைச் சார்வதற்காய்
பன்னாள் நினைந்தடிமை பாடுபட்டு நிறையவதல்லாம்
நின்னருளே நன்கறியும் நிமலாநிஷ்காமியனே
எனைக்கை விடுவாயேல் எங்குறுவன் நாய்கழுதை
உனக்கே அடிமையென உலகம் அறியும்கொலோ
நானே நயங்கிநின்றால் நானிலத்து மாக்களெனைத்
தானே வசைசொலுவார் சலனமெனக் கில்லைகண்டாய்
தாயேயெனக்குரிய தம்பமே ஆதாவே
[illegible]யென் பிறவி நசைவசையைத் தீர்த்தருள்வாய்
நசைவசையைத் தீர்த்தே நலந்திங்கு காணாத
அசைதல் அசையா ததுகடந்த தூவெளியில்
நித்த நிருவிகற்ப நிர்மலா காரமெனும்
சுத்த நிராலம்ப சுகாதீத நன்னகரில்
வெட்ட வெரும்வெளியில் வேதாந்த வீதியிலே
சிட்டர் கணம்நிறைந்த தேவ தரிசனத்தில்
வித்தன் வரன்வரியான் வேதருத்த நல்லதிட்டன்
சித்தம் அமைதிபெற்ற தெய்வீக சன்னிதியில்
நாதமும்நா தாந்த நவையும் நவை தீர்ந்து
போதமும் காணாத பூங்கா வனந்தனிலே
மாலும் அரனயனும் மற்றுமுள தேவர்களும்
சாலத் தெரியாச் சரணார விந்தமதில்
ஒன்றும் அறியா உயர்ந்ததுரி யாதீதம்
நின்று விளைபோகம் நிமலக் குடியிருப்பில்

கரணம் கருவியெல்லாம் காய்ந்த பெருங்கானல்
மரண மயக்கமெல்லாம் மாய்த்த மலையடியில்
எல்லாம் கடந்த இமையமலைச் சாரலிலே
எல்லாம் நிறைந்த இகலோக மாமலையில்
என்னோடு மூவர்களை யெந்தை யிழுத்தேகிப்
பின்மூவர் அங்கிருத்திப் பேதையனை இங்குதள்ளி
வைத்தாய் பெருங்கருணை வள்ளலுனை உன்னிஉன்னி
அத்தா சரீரம் அதிகம்வந்து போயினதே (195)
போன சரீரமெல்லாம் பொன்னடியைப் போற்றிநின்று
நான்மூத்த நற்சரிதம் நன்கறியும் நின்னிதயம்
வந்த சரீரமெல்லாம் வருந்திப் புலம்பினதை
எந்தாய் இசைக்க எனக்கு எளிதாமோ
செய்த கவியையெல்லாம் செப்பஎனக் குத்தரமோ
நைதல் துடைத்தாண்ட நாயகமே தாயகமே
பண்ணும்நிஷ்காமியத்தாற் பழுக்கும் பழமெனநான்
எண்ணும் படிக்கிசைத்த எந்தாய் நமஸ்காரம்
தாய்போற் கருணைவைத்தென் சஞ்சலத்தை வேரறுத்துச்
சேய்போற் செருக்ககலச் செய்வாய் இதுசமயம் (200)
இந்தச் சரீரம் இதுவழுவு முன்னேஐயா
சொந்தக் குடியிருப்பிற் றூங்கும் சுகங்கொடுப்பாய்
தூங்கும் சுகங்கொடுத்து ச்சுத்தமன ஆற்றல்தந்து
பாங்கு பெறும்படிக்குப் பகவானே கண்பாரும்
சொன்னவையும் சொல்லத் தவறியதும் இன்னுமுள
என்னலமும் தந்து இறைவாழ வாழியதே. (203)

தபோவனம்.

1. பெரிய வெள்ளத்தில் மூழ்கு தபோவனம்
பேசும் வாயை அடைத்த தபோவனம்
அரிய ஒன்றில் அழுந்து தபோவனம்,
ஆசை நோயை அழித்த தபோவனம்.

2. சாதி-பேதம் ஒழித்த தபோவனம்
சமய வாதம் அழித்த தபோவனம்
ஓதி யுள்ளுணர் வான தபோவனம்,
உரையுஞ் சொல்லும் ஒழிந்த தபோவனம்.

3. ஆதி யந்தமும் அற்ற தபோவனம்
அசைவில் லார்க்கரு ளான தபோவனம்
சோதி யங்கழல் தந்த தபோவனம்
துறந்த பேர்க்குத் துறந்த தபோவனம்.

4. சுத்த மாயை ஒழிந்த தபோவனம்
சூதும் வாதும் துறந்த தபோவனம்
நித்தம் இப்படி வைத்த தபோவனம்
நெற்றி வட்டத் தமர்ந்த தபோவனம்.

5. என்றும் ஆனந்த மான தபோவனம்
எங்கு மாகி நிறைந்த தபோவனம்
பொன்று வார்மனத் தார்ந்த தபோவனம்
பூர ணக்கிளி யோற்று தபோவனம்.

6. போக்கொடு வர வற்ற தபோவனம்
பூமி யந்தரம் போற்று தபோவனம்
சூக்கு மத்தி லுதித்த தபோவனம்
துணைக ளற்றது மெங்கள் தபோவனம்.

7. நாலு வேதங்கள் காணாத் தபோவனம்
நல்ல வானவர் காணாத் தபோவனம்
மாலு மூவருங் காணாத் தபோவனம்
வலிய வென்றலை ஆண்ட தபோவனம்.

8. சோகக் காட்டை யெரித்த தபோவனம்
சோம்பற் காட்டை அழித்த தபோவனம்
ஆகத் துள்ளே அமர்ந்த தபோவனம்
அசைவில் லாநிலை தந்த தபோவனம்

9. சுந்த வேளையும் நின்ற தபோவனம்
எளிய னெனைப் புரந்த தபோவனம்
சொந்த மாய்வந்து ஆண்ட தபோவனம் ,
துன்னு தாய்க்கரு தூர்த்த தபோவனம்.

10. துள்ளற் குப்பையைச் சுட்ட தபோவனம்
சுட்டி ஒன்றினைக் காட்டாத் தபோவனம்
உள்ளந் தன்னி லொளித்த தபோவனம்
ஊமை யாக்கிக் கலந்த தபோவனம்.

11. ஆசைப் பேயை அழித்த தபோவனம்
அன்ப ருள்ளத் தமர்ந்த தபோவனம்
நேசிப் பாரை விடாத தபோவனம்
நேசி யார்க்கதி தூர தபோவனம்,

12. பொய்ய ருள்ளத் தொளித்த தபோவனம்
பொறுமை யற்றவர் காணாத் தபோவனம்
மெய்ய ருள்ளத் தொளிருந் தபோவனம்
வேத ஞானன் காணுந் தபோவனம்

13. சிந்தை யற்றவர் நிற்குந் தபோவனம்
செய்கை யற்றவர் சேருந் தபோவனம்
மந்த சீலர்கள் பாராத் தபோவனம்
வாழ வந்தவர் வாழுந் தபோவனம்.

14. என்று மோர்படித் தான தபோவனம்
என்னி லென்னை இருந்து தபோவனம்
ஒன்றி லொன்றிலை யென்ற தபோவனம்
ஓப வைத்தெனைப் பார்த்த தபோவனம்.

15. ஜாக்க ரந்தனில் நின்ற தபோவனம்
சார்ந்த சொர்ப்பனங் கண்ட தபோவனம்
நீக்க மற்று நிறைந்த தபோவனம்
நெஞ்ச வஞ்சங் கரைத்த தபோவனம்.

16. சிந்தை யின்மயல் தீர்த்த தபோவனம்
தேடுஞ் சிந்தனை தந்த தபோவனம்
பந்த மற்றிடப் பார்த்த தபோவனம்
பாடி ஆடிப் பரமடைந் தேன் கொலோ.

ஊர்.

1. நாலு வேதம் புரிப்பென்ற தெங்களூர்
நான்கு காலத்தும் நானிலா தெங்களூர்
மாலு மூவர் பிறந்தவூர் எங்களூர்
வானும் வையம் ஜெனித்தவூர் எங்களூர்.

2. எவர்கள் கொள்கையும் எங்கொள்கை யென்னுமூர்
எவர்கள் செய்கையும் என்னல தென்னுமூர்
சுவர்க்க போகம் துறந்தவூர் எங்களூர்
துறந்தபேர்கின்று தூங்குமூர் எங்களூர்.

3. துக்க மென்பது காணாவூ ரெங்களூர்
சோக மென்பதும் பாராவூ ரெங்களூர்
எக்க ணத்திலும் காணுமூ ரெங்களூர்
ஈசன் நாரணன் காணாவூ ரெங்களூர்.

4. பூசை யாதிகள் அற்றவூ ரெங்களூர்
புகலும் மந்திரம் போனவூ ரெங்களூர்
ஆசை நாயை அடக்குமூர் எங்களூர்,
அந்தர் நாட்டத் தமருமூ ரெங்களூர்.

5. சுத்த வான்வெளி யாகுமூ ரெங்களூர் [ளூர்
தோன்றும் தோற்றங்கள் தோன்றாவூ ரெங்க
அத்தம் தன்னி லமர்ந்தவூ ரெங்களூர்
அன்பர் கூட்டங்கள் வாழுமூ ரெங்களூர்.

6. ஒன்றில் ஒன்றிலை யென்றவூ ரெங்களூர்
ஓய்ந்த நித்திரை கண்டவூ ரெங்களூர்
சென்று சென்று திரும்புமூ ரெங்களூர்
சேர்ந்த பேர்களைச் சேர்க்குமூ ரெங்களூர்.

7. தன்னை யன்றியோர் தேவை யிலாதவூர்
சார்ந்த குப்பைகள் சாருமூ ரெங்களூர்
பின்னை யோர்பொருள் தேடாவூ ரெங்களூர்
பிரமை நீங்கும் பெரியவூ ரெங்களூர்.

8. ஆக மக்கலை காய்ந்தவூ ரெங்களூர்
ஆதி அந்தமும் அற்றவூ ரெங்களூர்
மாக மாக விரிந்தவூ ரெங்களூர்
மவுன வாட்கையாய் வாழுமூ ரெங்களூர்.

9. வாத தர்க்கம் ஒழித்தவூ ரெங்களூர்
மன்னும் துன்னலை மாய்த்தவூ ரெங்களூர்
காத லாகிக் கசியுமூ ரெங்களூர்
கைத வற்கனி காட்டுமூ ரெங்களூர்.

10. சொல்லெல் லாம்சுகம் தோன்றுமூ ரெங்களூர்
சும்மா இருக்கச் சுகமெனும் எங்களூர்
வல்லானைத் தானாய் வணங்குமூ ரெங்களூர் (ளூர்
மாயை யெனும்கூட்டம் மாய்ந்தவூ ரெங்க

11. சுத்த மாகத்திற் றோன்றுமூ ரெங்களூர்
தோற்றம் அற்ற சுகவெளி எங்களூர்
சித்தம் நிற்க இடம்தந்த தெங்களூர்
நிர்ம்ம லத்தில் நிறைந்தவூ ரெங்களூர்

12. பேத பேதம் அழித்தவூ ரெஙகளூர்
பேணு வார்தமைப் பித்தேற்று மெங்களூர்
ஆகி மாயை பிறந்தவூ ரெங்களூர்
அகிலந் தோன்றி யடங்குமூ ரெங்களூர்.

13. கண்ட காட்சிகள் காணாவூ ரெங்களூர்
கபட நெஞ்சினர் காணாவூ ரெங்களூர்
சண்டை வாதம் தொலைத்தவூ ரெங்களூர்
சத்த மின்றி யிருக்குமூ ரெங்களூர்.

14. எச்சும் பேச்சும் இனிக்குமூ ரெங்களூர்
எந்தக் கோலமும் ஏற்குமூ ரெங்களூர்
காட்சி யின்றிக் களிக்குமூ ரெங்களூர்
கற்ப காலம் சுகிக்குமூ ரெங்களூர்.

15. கற்ப காலத்து மாதவப் பேற்றினாற்
கண்ட மிந்தக் கனிமய வாட்கையைச்
சொற்ப நேரமும் விட்டுப் பிரிந்திடோம்
சுத்த சைதன்யன் சொந்தவூ ரெங்களூர்.

16. ஏக மான நிரந்தர வெள்ளத்தில்
என்னை யென்றும் இருத்து மூரிந்தவூர்
சோக மானவூ ரிந்தவூ ரேயலத்
துக்கம் நீங்கிச் சுகித்திருப் போம்கொலோ.

முத்திரை.

1. சத்த மொன்றின்றித் தனிக்குமென் முத்திரை
சற்குரு தானாய்த் தருமெங்கள் முத்திரை
நித்திரை ஜாக்கரம் கண்டஎம் முத்திரை
நீங்கா தெம்மோடு நிதம்நின்ற முத்திரை

2. சாதல் பிறத்தல் அகற்றுநல் முத்திரை
சங்கற்பம் யாவையும் தானென்ற முத்திரை
ஓதி ஓதாநிலை தந்தஎம் முத்திரை
உண்மைக்கு மாறில்லா தோங்குமோர் முத்திரை

3. எல்லாச் சமயத்தும் நின்றாடும் முத்திரை
எல்லாச் சமயத்திற் கெட்டாவோர் முத்திரை
நில்லாது தேகம் எனச்சொன்ன முத்திரை
நில்லாது நிற்க நிலைதந்த முத்திரை

4. பெருமை யொடுபுகழ் காணாத முத்திரை
பேசா நிலைதந்து பேணுமென் முத்திரை
சிறுமைப் படாதென்னை ஆட்கொண்ட முத்திரை
சிந்தைச் சிறைநீக்கிச் சேர்த்திட்ட முத்திரை

5. பந்தப் படுகுழி பாழாக்கு முத்திரை
பார்க்கும் பொருளெல்லாம் பரமென்ற முத்தி
இந்த உடற்குள் எழுந்தஎம் முத்திரை [ரை
என்னிலே யானாய் இருக்குமா முத்திரை

6. வேதத் தெளிவை விளக்கிய முத்திரை
வீண்வாத தர்க்கம் ஒழித்திட்ட முத்திரை
சாதி சமயம் கடந்திட்ட முத்திரை
சத்த மடைத்தென்னைத் தாழ்ப்போட்ட முத்திரை

7. எல்லா மதமும் எழுந்தென்ற முத்திரை
எல்லாம் இருட்டென்ற ஏகாந்த முத்திரை
சொல்லாமற் சொல்ல வெளிவந்த முத்திரை
தூங்காமற் றூங்கச் சுகம்என்ற முத்திரை

8. சஞ்சிதக் குப்பையைத் தான்சுட்ட முத்திரை
சாரும் ஆகாமியம் காய்ந்திட்ட முத்திரை
மிஞ்சு பிராரத்வம் புசியென்ற முத்திரை
விண்ணோரும் காணா வெளிவந்த முத்திரை

9. ஜென்மப் பழக்கத்தைத் தீய்த்திட்ட முத்திரை
தேவாதி தேவரும் காணாத முத்திரை
கன்மப் புலைக்கூட்டம் காய்ந்திட்ட முத்திரை
காணுவோர் காணக் கருதும்நல் முத்திரை

10. செல்வச் செருக்கை அறுத்திட்ட முத்திரை
தேயாத செல்வம் அளித்திட்ட முத்திரை
கல்விச் செருக்கைக் கழித்திட்ட முத்திரை
கருவி கரணம் கடந்திட்ட முத்திரை

11. மூவர் வானவர் காணாவோர் முத்திரை
முனிவர் சித்தர்கள் பாராவோர் முத்திரை
தேவை அற்றவர் தேடுமோர் முத்திரை
சிந்தை அற்றவர் சேருமோர் முத்திரை

12. சமய வாதிகள் காணாவோர் முத்திரை
தர்க்க வாதிகள் பாராவோர் முத்திரை
அமைதி அற்றவர்க் ககப்படா முத்திரை
அமைதி உற்றவர்க் ககப்படும் முத்திரை

13. மோன நன்னெறி நிற்கின்ற முத்திரை
முழுதும் மாயையை ஆள்கின்ற முத்திரை
மானம் என்னை விடுஎன்ற முத்திரை
மதி கொடுத்தென்னை வாழ்வித்த முத்திரை

14. தத்து வாதிநா னன்றென்ற முத்திரை
சடலக் கூட்டைச் சடமென்ற முத்திரை
கத்தும் கூட்டம் நீஅன்றென்ற முத்திரை
கதவைச் சாத்தக் கதிதந்த முத்திரை

15. சொந்தம் ஒன்றும் இலையென்ற முத்திரை
சொன்ன ஓர்சொல் நிலையென்ற முத்திரை
எந்த ஜென்மமும் நிற்குமோர் முத்திரை
என்றும் என்னை ஈடேற்றுமோர் முத்திரை

16. கோடி கோடி தவப்பயன் முத்திரை
கொண்டு கண்டு நிலைபெற்ற முத்திரை
ஓடி டாதென்னை நில்லென்ற முத்திரை
ஓய நேயச் சுகம்என்ற முத்திரை

1. அசைவை யொழித்தே அதீதமாய் நின்றவரானந்த மானாரென் றுந்தீபற
ஆய்மொழி லற்றாரென் றுந்தீபற

2. பேயாம் உலகத்தைப் பி[illegible]னக் கண்டவர் மாயா திருப்பரென்
றுந்திபற ம[illegible] கண்டாரென் றுந்தீபற

3. தாய்போலப் பெண்களைத் தானெண்ணிக் கொண்டவர் பேய்போற் றிரிவா
ரென் றுந்திபறப் பித்தரிற் பித்தரென் றுந்தீபற

4. எப்பக்கம் பார்த்தாலும் நன்மய மாயினா ரீசனைக் கண்டாரென் றுந்தீபற
என்றும் இறவாரென் றுந்தீபற

5. சமயங் கடந்த பெரியோனைக் கண்டவர் சத்தமற்றாரென உந்தீபறத்
தானினை யற்றாரென் றுந்தீபற

6 மானார் மயக்கந் தவிர்த்த பெரியோரே ஞானிய ராவரென் றுந்திபற
வாதைக ளற்றாரென் றுந்தீபற

7. தானாகு மேட்டைச் சரிபார்த்து வந்தவர் ஊனை யொழித்தாரென்
றுந்தீபற ஊமைய ராவரென் றுந்தீபற

8. நாலாறு வேதமுஞ் சாத்திரந் தர்க்கமும் மாலாகு மென்றொழித்
துந்தீபற வான்வெளி கண்டுநின் றுந்தீபற

9. தன்னை யறிந்த புருடனைச் சாருஞ் சதகுப்பை யில்லையென் றுந்தீபறச்
சாரினுஞ் சாராதென் றுந்தீபற

10 என்னேர மும்பர வானந்தங் கொண்டவர் எங்குற்றா லென்னவென்
றுந்தீபற ஏகாந்த மோனரென் றுந்தீபற.

கிளிக்கண்ணிகள்.

உன்னை உனக்குள்வைத்து உத்தமமாய் நின்றுகொண்டாற்
றன்னந் தனிப்பெருமை கிளியே சார்ந்துவருஞ் சந்ததமே

வெட்ட வெளிதனிலே விளங்கா விளங்கிநின்றால்
பட்டப் பகற்கனவாங் கிளியே பாழுலகத் தோற்றமெலாம்

இருந்த படி இருந்தால் இறையுருவந் தோன்றுமங்கே
பொருந்து மலமுமன்றோ கிளியே பொன்றுமே இம்மையிலே

சத்தம் பிறந்தஇடம் தாக்கற்று நின்றஇடம்
பித்த னிருக்குமிடம் கிளியே (அது) பேசாப் பெருமையல்லோ

சின்ன வயதிலென்னைத் திரைநீக்கிக் காட்டித்தந்த
தென்ன வென வுரைப்பேன் கிளியே (யென்) னப்பன் பெருமைதனை (5)

எல்லாமாய் நின்றபரன் எச்செயலு மற்றபரன்
சொல்லாமற் சொன்னபரன் கிளியே தூங்காமற் றூங்குவமே

முன்னு மிருந்தவன்றான் முதன்மையாய் நிற்பவன்றான்
பின்னு மிருப்பவன்றான் கிளியே பேசாமற் பேசுவமே

ஆணுமல்லப் பெண்ணுமல்ல அலியல்லப் பேடுமல்லக்
காணும் பொருளனைத்தும் கிளியே (அவன்) காணுஞ் சொரூபனடி

நினையாச் சமயத்திலே நில்லென் றெனையிருத்தி
இனியவோர் வார்த்தைசொன்னான் கிளியே (அது) என்னை விழுங்கியதே

சும்மா இருப்பவர்க்குத் தோன்றுஞ் சுயசொரூபன்
சும்மா இராதவர்க்கே கிளியே துன்பமும் வேதனையே (10)

தானா யிருப்பவனார் தானென் றறிந்தவனார்
ஊனை யழித்தவனார் கிளியே (அவன்) உண்மைப் பொருளலவோ

பிறவிப் பெருங்கடலிற் பேய்போற் றிரிந்த என்னை
மருவி யெடுத்தணைத்தான் கிளியே மவுனமாய் நிற்கச்சொன்னான்

சங்கற்பமான எல்லாம் தண்ணருளி லேகரைத்து
இங்கற்ப மானஎன்னைக் கிளியே யேகாந்த வீட்டில்வைத்தான்

சாதி சமயமெல்லாம் சத்தத்தின் தோற்றமென்னும்
சூதை யெடுத்துரைத்தான் கிளியே (என்) தொல்லை தொலைந்ததுவே

இறந்து பிறப்பதில்லை யென்றுதிட மாக்கியென்னை
இருந்தபடி யிருத்திக் கிளியே (அவன்) என்னைக் கலந்துநின்றான் (15)

ஆரும் பரவெளியில் ஆனந்த நாடனொடு
சேரும் சிறப்பைத்தந்தான் கிளியே (அவன்) தேவாதி தேவனல்லோ

எல்லாப் பிறப்புங்கொண்ட இச்சையடி யோடொழித்து
நில்லா மனக்குரங்கைக் கிளியே நிறுத்தினான் தன்மயத்தில்

பொல்லாப் புழுமலிநோய் பூண்ட இந்தப் பாழுடம்பை [டான்
நில்லா தெனவுரைத்தே கிளியே (என்னை) நேசத்திற் சேர்த்துக்கொண்

ஆண்டான் பெருமைதன்னை ஆவியுள்ள காலம்வரை
நீண்டு துதித்திட்டாலும் கிளியே (அவன்) நேயம் உயர்ந்ததல்லோ

பார்ப்பார்க்கு நல்லமலை பாரார்க்கு மேருமலை
ஏறி இறங்குவார்க்கே கிளியே (அது) என்றும் வழுக்குமலை (20)

கலையளவாய் நின்று நின்று கண்கலங்கி நின்றஎன்னை
மலையளவாய் வந்துநின்றே கிளியே மவுனத்தை ஓதிவைத்தான்

பாழும் உலகதனில் பட்டழிந்து கெட்டஎன்னைச்
சூழும் பொரிக் குவையைக் கிளியே சுட்டெரித்துத் தூற்றினனே

முன்னைவினை முள்கருக்கி முத்திக் குளந்தனிலே
என்னைக் குழுப்பாட்டினன் கிளியே (அது) எங்கும் நிறைந்ததுவே

தெய்வஉலகந்தனிலே சேர்த்தணைத்துக் கொண்டிருந்தி [தே
மையல் தகர்த்தெரிந்தான் கிளியே (அவன்) வல்லபத்தை யென்சொல்

எந்தநிமிஷத்தினிலும் எமையாண்டான் வந்துவந்தென்
பந்தங் கிழித்தெரிந்தான் கிளியே (அது) பழமோ பலாப் பழமோ (25)

வேதங்கள் கண்டிடாத வேதாந்த நாதன்வந்து
காதில் முணுமுணுத்தான் கிளியே காட்டினன் தன்னிலையை

துள்ளுங் குதிப்படக்கிச் சுத்தசொரூபங்கொடுத்து
மெள்ளத் தனிக்கவிட்டான் கிளியே வெட்டவெளிப் பொட்டலிலே

மாலை அவனெடுத்தான் மாமயலைத் தான்கொடுத்தான்
கோலம் பெரிதல்லவோ கிளியே (என்) குற்றமொழிந்ததுவே

மாலுஞ் சிவன்பிரமன் மற்றுமுள்ள தேவரெல்லாம்
சாலத் [illegible]யுரவொன்றைக் கிளியே தந்தான் கணப்பொழுதில்

என்னை யெடுத்தணைத்து என்னெதிரே வந்துநின்று
கன்னத்தில் முத்தமிட்டான் கிளியே (என்) கள்ள மழிந்ததுவே (30)

காட்டிக் கொடுத்தபரம் கர்மவினைத் துள்ளல்களை
ஆட்டிக் கசக்கும்பரம் கிளியே அதிகமயல் தந்தபரம்

அஞ்சாப் பெரியமலை ஆளேறும் பாரமலை
நெஞ்சங் கரைகுவார்க்கே கிளியே (அது) நில்லாமல் நிற்குமலை

என்னை யெனக்குத்தந்தான் என்குலத்தைச் சுட்டெரித்தான்
மன்னும் விளக்குவைத்தான் கிளியே வந்தது பேரின்பமே

சந்தைப் புலைச்சேரியில் தங்கித் திரிந்தஎன்னைச் [சொல்வேன்
சொந்த மெனவந்தாண்டான் கிளியே (அவன்) சொன்னசொல் என்ன

பொங்கித் ததும்பியெங்கும் பூரணானந்தவெள்ளம்
தங்கிப் புரண்டுவந்தான் கிளியே (என்) றன்னை எடுத்தணைத்தான் (35)

பாலை யிடுக்கினாற்போல் பார்த்திடுக்கி னனைசைவைக்
கோளை யொழிந்ததுவே கிளியே கூடினேன் உச்சியிலே

என்னிடத்திற் றேற்றமுறும் எண்ணிலடங் காஅசைவத்
துன்னுமருட் பார்வையாலே கிளியே சுட்டுப் பொசுக்கினனே

பொய்க்குருக்கள் சார்பில்நின்று புத்திகெட்டு நின்றஎற்கு [ன்
மெய்க்குருவைக் காட்டித்தந்தான் கிளியே நான்வெட்கித் தலைகுனிந்தே

எல்லாப் பவிசுந்தந்தான் எச்செயலு மாகிவந்தான்
பொல்லாப் பொழிந்ததுவே கிளியே (என்) புலனும் அழிந்ததுவே

ஆர்க்கும் அடிமையல்ல அசைவெல்லாம் உன்னடிமை
பார்பா ரெனஜொலித்தான் கிளியே (என்) பார்வை மழுங்கினதே (40)

நாவை அடக்கிவைத்தான் நடுநாவை ஊடறுத்தான்
தேவையெனும் நாவையுமே கிளியே (அதன்) சீரைக் குலைத்துவிட்டான்

சொல்லுஞ் சுவைப்பொருளும் சுத்தபரன் தோற்றமெனச்
சொல்லிக் கொடுத்தவனைக் கிளியே (நாம்) தொழுது வணங்குவமே

என்னை யறியாமலே ஏவல்பணி செய்துநின்ற
என்னை அறிவித்தவன் கிளியே (அவன்) என்றும் இருப்பவனே

காட்டிற் குயிலைத்தேடிக் கானெல்லாம் பார்க்கஎன்றன்
வீட்டிற் குயிலைக்காட்டிக் கிளியே (அவன்) விள்ளாடில் விண்டுநின்றான்

சரியை கிரியையோகம் தண்ஞான மென்னும்நான்கும்
முறையேயெடுத்துரைத்தான் கிளியே (என்னை) மோனத்தில்நிற்கவைத்தான்

பாலர் விருத்தரோடு பசாஷர்குணம் அத்தனையும்
சால வருகுமென்றே கிளியே தந்தான் அநுபூதியே

அந்தர்முக நாட்டமதில் ஆரொன் றெனையுரைத்தான்
சிந்தை யிறந்ததுவே கிளியே (அது) தேனோ கனிரசமோ

குருவென்று நானுரைத்தேன் குழராதென் றேயடித்தான்
குருவும் பரமுமாகக் கிளியே (என்னுள்) கூடிக் குலாவினனே

தருமத் துரையிடுமே சத்தமற்ற சாமியடி
பருவ நிலையறிந்தே கிளியே (அவன்) பயிரை வளர்ப்பவண்டி (50)

ஆகங் குழைந்தார்க்கும் அன்புருவாய் நிற்பார்க்கும்
தாகம் அடைந்தவர்க்கும் கிளியே (அவன்) தன்னுருவங் காட்டுவனே

பற்றாகி நின்றஎன்னைப் பற்றித் தொடர்ந்துவந்து
பற்றாகா வண்ணம்நின்று கிளியே (அவன்) பார்த்தான் பறந்ததுவே

பாஷா இலக்கணத்தைப் பற்றி வெறி கொண்டஎன்னை
மோசம் எனவுரைத்தான் கிளியே (அவன்) முற்றுந் துறந்தவனே

நாய்போலப் போகமதில் நானலைந்து கொண்டஎன்னைத்
தாய்போ லெடுத்தணைத்தான் கிளியே (என்) சலனம் ஒழிந்ததுவே

பெண்டுபிள்ளை சுற்றமெல்லாம் பெரியதுணை யென்றஎனை
அண்டி அருள்கொடுத்தான் கிளியே (அவன்) அருளாக மாறினதே ()

எத்துயர காலத்திலும் எம்பெருமான் றன்னையுன்னில்
அத்துயர மாய்ந்துஎன்னைக் கிளியே (அவன்) அருளில் அமர்த்தியதே

மந்திரம்போல் அல்லஇது மந்திரத்துள் மந்திரமென்
சிந்தை யுறஅழுத்திக் கிளியே (என்னைச்) சித்திரம்போ லாக்கினனே

தேடக் கிடையாவொன்றைத் தேனூறுங் கற்பகத்தைத்
தேடி யெடுத்துத்தந்து கிளியே (என்) சிந்தையைக் கொள்ளைகொண்டான்

பசையில் எலும்பாமிந்தப் பாழுலகச் சேரியின்கண் [ஆண்டவனே
அசையாதே யென்றுசொன்னான் கிளியே (அவன்) ஆரென்றால்

அஞ்சித் திரிந்தஎன்னை அன்பா லவனழைத்துக்
கொஞ்சிக் குலாவும்இன்பம் கிளியே (அதைக்) கூறவும் நாவெழலை

எத்தனை காலமிந்த இழவெடுத்த பேரிழவில்
பித்தனைப் போலலைவாய் கிளியே பேசாமல் பேசவையே

மண்ணாசை வைத்தவர்க்கு மண்ணையள்ளிப் போட்டதல்லால்
உன்னாசை போலவாமோ கிளியே (அதற்கு) ஒன்றும் உவமையிலை

பரத்தின் தரிசனத்தைப் பார்த்தே அநுபவிப்பார்
மறு...ம்வருவதுண்டோ கிளியே (இந்த) மாயைமயக்கானலிலே

நந்தவனமடியோ நாலுகாற்சாவடியாம்
எந்தைஇருக்குமிடம் கிளியே (இது) எல்லோர்க்குந்தோன்றிடாதே

ஒன்றிலொன்றைக் காணுமடி ஓய்ந்தசுழுத்திவண்ர
கன்றுதலெற்றுக்கடி கிளியே (அந்தக்) காரணனைக் கண்டுநில்லே

அருந்தல் பொருந்தல்முதல் ஆதியந்தக் கேடுகளும்
மறந்த செயலல்லவோ கிளியே 'உன்' மதியை மதித்துநில்லே

என்ன சடலமிது எப்பிணிக்கும் பாண்டமிது
உன்னையே பார்த்துநின்றால் கிளியே 'இது' ஊத்தைமலக் கூடடியோ

நான்செத்து நின்றவர்க்கு நாதாந்த வெட்டவெளி
தான்வந்து நிற்குமடி கிளியே 'இது' சத்தியம் சத்தியமே

எல்லா மயக்கும்விடும் ஏகாந்த காலம்விடும்
நல்லான் றனைநனவில் கிளியே 'நீ' நாடாமல் நாடிநின்றால்

பார்க்கும் பெரியபொருள் பாராமற் பார்க்கும்பொருள்
ஆர்க்கும் பெரியபொருள் கிளியே 'என்' அச்சந் தவிர்த்தபொருள்

தன்னை யறிந்தவர்க்குத் தானாகி நிற்பவர்க்குப்
பொன்னாஷ லென்னுமிந்தக் கிளியே போக்குவரவற்றுவிடும்

எல்லாச் செயலுங்கெட்டு என்னிருப்பி லேயமர்ந்து
நில்லாமல் நிற்கும்நிலை கிளியே 'என்' னேரம் வருவதுவோ

பேசும் பெரியபொருள் பேசாமற் பேசும்பொருள்
ஆசை இறந்தபொருள் கிளியே (என்) அறிவுருவாய் நின்றபொருள்

போக்குவர வற்றபொருள் புந்திதெளி வாக்கும்பொருள்
தாக்கற்று நின்றபொருள் கிளியே (என்) சலனந் தகர்த்தபொருள் (75)

இந்த உடம்பிருப்பின் எல்லை யறிந்ததினால்
பந்தங்கிழி பட்டதே கிளியே (அது) பார்த்தால் பனிமலையே

ஆதியந்த மில்லாவென்று ஆகமங்கள் சொன்னசொல்லின்
சோதியை யென்னுள்ளேயே கிளியே தொட்டேன் விழுங்கினனே

நந்தா வனமளித்தான் நல்லதண்ணீர்த் தோப்பளித்தான்
சிந்தா குலமழித்தான் கிளியே (நான்) செத்து மரித்தனனே

தூக்கத்தி லில்லா இந்தச் சோம்ப லுடலமடி
ஜாக்கரத்தில் வந்ததென்ன கிளியே (என்) சண்டாளப் பாசமடி

அறிவே உருவமாக ஆங்காங்கு கண்டவர்க்கு
அறிவுக் கயலுமுண்டோ கிளியே ஆன்ம அமைதிவரும் (80)

கட்டையாம் வீட்டுக்குள்ளே ககனவெளி காட்டித்தந்தான்
வெட்ட வெளிதனிலே கிளியே (என்னை) வீற்றிருக்கச் செய்தனனே

சூட்சம்போ லல்லஅறி சூட்சத்திற் சூட்சமிது
ஆச்சர்ய மென்னசொல்வேன் கிளியே (அந்த) ஆகாய நாட்டமடி

கூடப் பிறந்தவர்கள் கூட்டம்அடி யோடொழிந்தார்
மாடப் புறாவைப்போலக் கிளியே (என்) மனமும் இறந்ததுவே

நினைப்பு மறப்பினாலே நீங்காச் செனனம்என்றான்
நினைப்பும் மறப்பும்விட்டேன் கிளியே (நான்) நித்திய பூரணனே

சஞ்சித ஆகாமியம் சாருபிரா ரத்வமெல்லாம்
கொஞ்சஅறி வாளர்க்கே கிளியே (இது) குறிப்பில் குறிப்பாகுமே (85)

ஒன்றும் அறியானைப்போல் ஊரில்ஒதுங்கித் தங்கி
நின்று சுகிப்பதென்றோ கிளியே (இது) நேர்த்தியிலும் நேர்த்தியடி

கண்டார் புகழ்ந்தாலென்னக் காரியுன்னை வைதாலென்ன
ரெண்டும் சமமாகவே கிளியே (நீ) நினைந்துநினைந்து நில்லே

ஆடுகின்ற ஆட்டமெல்லாம் ஆண்டவனின் ஆட்டமென்று
ஆடி அமர்ந்திருப்பாய் கிளியே (இது) அடங்காத இன்பமடி

சுழுத்தி மரணமிது சேர்ந்தவெளி யாம்பிறப்புப்
பழக்க வருகுமடி கிளியே (அந்தப்) பழத்தை மறந்திடாதே

உலகம் ஒருமரமாம் (அது) உண்மைச் சொருபமடி
கலக மனத்தைத்தள்ளிக் கிளியே[அந்தக்]கற்பகத்தைக் கண்டுகொள்ளே

இரவுபக லற்ற இடம் ஏகாந்த வெட்டவெளி
கரவுடைய நெஞ்சத்தார்க்கே கிளியே [அது] காணாத வீடடியே

வீட்டின் பெருமைதன்னை வீட்டிற்குள் வீற்றிருந்து
கேட்டால் மதிப் பொங்குமே கிளியே கீழ்மே லுலகமெல்லாம்

சாத்திரங்க ளோதினாலும் தர்க்கந் தெரிந்திட்டாலும்
மாத்திரைப்போதாகும் இன்பம்கிளியே (அதில்) வாய்க்குமோ வாய்த்திடாதே

என்ன தெரிந்தாலென்ன என்னைத் தெரியாவிட்டால்
அன்னை கருக்குழிதான் கிளியே அழியா தொருநாளுமே

தன்னந் தனிப்பொருளைச் சார்ந்துதொழும் உத்தமர்க்கு
என்ன கவலையடி கிளியே (அவர்கள்) என்றும் பிறப்பதில்லை (95)

நில்லாத கட்டையடி நிலையங்கிச் சட்டையடி
பொல்லா மலக்கூடடி கிளியே பூரணத்திற் றுஞ்சிநில்லே

நாற்றப் புழுக்கூடடி நம்பினால் மோசமடி
காற்றுந் துருத்தியடி கிளியே (இந்தக்) கட்டைவிட்டுக் கண்டுகொள்ளே

கண்டால் உறங்கவைக்கும் காதல் அதிகரிக்கும்
உண்டாற் கிரங்கவைக்கும் கிளியே (அந்த) ஊமைத்துரை நல்கும் இன்பம்

தூங்காமற் தூங்கவைக்கும் சோம்பல் அழித்துவைக்கும்
ஏங்காமல் ஏங்கவைக்கும் கிளியே (அந்த) ஏகாந்த இன்பமடி

கோடானு கோடிஜென்மங் கொண்ட துயரமெல்லாம்
ஓடாமல் ஓடினதே கிளியே (நம்முள்) ஊமையனைக் கண்டபோதே( )

குழல்.

ஆட்டம் ஆடாநிலை கண்டார்க்கே எங்குங் கொண்
டாட்ட மதாமென ஊதுகுழல் ஆடியும் ஆடாரென் றூதுகுழல் (1)

குப்பைக் குவியலைச் சுட்டெரித்தாருக்கே
சொர்ப்பனக் காட்சியென் றூதுகுழல் சும்மா இருப்பாரென் றூதுகுழல் (2)

பாம்பு.

செத்துப் பிறப்பதிரு சப்தமென் றருட்
டெய்வ நிலையினின் றாடாய்பாம்பே
சேட்டையும் அற்றுநின் றாடாய்பாம்பே (1)

காமே நமக்குத்துணையென நம்பிப்பல்
நட்டணை தீர்த்தோமென்றூடாய் பாம்பே
கா மனைசவற்றேமென் றூடாய்பாம்பே (2)

காய்ந்தசருக்கும் எந்துள்ளாற் பொரிகளைக்
காட்டிக் கொடுத்தனென் றூடாய்பாம்பே
காய்கனல் வைத்தனென் றூடாய்பாம்பே (3)

என்னிலே யென்னையிருக்கச் செய்தான்றனை
யெண்ணி யெண்ணி நினைந்தாடாய்பாம்பே
யேதங்க ளற்றேமென் றூடாய்பாம்பே (4)

கோன்.

அகண்டமலை யதனி லாருகோனே—பா
ஆனந்தம் தோன்றுமங்கே பாருகோனே (1)
சகல வினையும்விட்டுத் தனிகோனே
கூட்டம்சாரும் விட்டால்தோன்றும் இதைத்தாண்டுகோனே ()

பசு.

தோற்றம் மதியார்க்கே—பசுவே—தோன்றும்சுக போதம்
வேற்றுருக் கொண்டார்க்கே—பசுவே—மேவிடும் பாசபந்தம் (1)
தானகக் காண்பார்க்கே—பசுவே—சாரும்பல பேதம்
ஊனகக் காண்பார்க்கே—பசுவே—ஐயா விலங்காகும் (2)

கவலைதீர் விருத்தம்.

1. னைதிற்றேன்றுந் தோற்றமெல்லாம் வாராமைக் காய்ப்பெருங்கவலை
மதிப்பார் மதிக்காதிருந்ததற்காய் வாட்டங்கொள்வதொரு கவலை
தனதென்றிருந்த பொருள்களெல்லாம் தவறுங்காலத் ததுகவலை
தாயார் பக்ஷமுடனிருந்து தள்ளிப்போங் காலொரு கவலை
இனத்தார்கவலை தினக்கவலை எழைவயிற்றின் இரைக்கவலை
ஈசா எல்லாக் கவலைகட்கும் இலக்காயிருக்க இனிப்பொறுக்கேன்
தனதாமுனது அநுபூதித் தயவைக் கொடுத்தென் சஞ்சலத்தைத்
தானே யொடும்படி செய்தே சாந்தா கடைக்கண் ணருள்புரியே

2. சந்தை யுலகென் றெனக் குரைத்த காலந்தொகுத்து நான்றனியாய்த்
தங்கிவாழ நினைவிருந்தும் தானேயவை கூடாமையினால்
மந்தி மரத்தைத் தாவுவபோல் மனமே தாவிமதிமயங்கி
வாடிவாடிச் சலித்துவிட்டேன் வானே வானின் விழுப்பொருளே

இந்தவிதம் எனக்கடர்ந்த இருளாங் கொடிய துயரமெலாம் (ற
இன்றேயொழித் துன்சுகக்கடலை யெனக்குக்கொடுத்த தென்னா
சிந்துசூழ்ந்த புவியூடும் சோலைநிறைந்த வனத்தூடும்
சுகமாரன்பர் மனத்தூடும் துளிர்ப்போய் கடைக்கணருள்புரியே

3. என்னநோம் பிறந்தேனோ எனக்கேனிந்தக் கொடுந்துயரம்
ஏழை தாங்கவல்லேனோ எல்லாமுனக்குத் தெரியாதோ
பொன்னோர் கவலை அவைதீர்ந்தாற் பூவை கவலையது வொழிந்தாற்
புகழேயில்லா இகழ்மொழியாற் புலம்புங் கவலையிவை போனாற்
கன்னெஞ்சாரும் மடையரெல்லாம் கழறும்வசைகள் பலகவலை
கவலையின்றி ஒருநேரங்காணேன் காணேன் சுகமொடு
மன்னும் புவனக்கடலூடும் மலையினூடும் கானூடும்
வயங்கித்ததும்பிப் பூரணமாய் வாழ்வோய் கடைக்கணருள்புரியே

4. நாங்களெலாத் துயரமெல்லாந் தங்கித்தங்கிச் சமஸ்காரத்
தாலேவந்த வாசனையாற் றமியேன் சலனம்பொறுக்காமல்
ஏங்கியேங்கி அழுதுவிம்மியிருந்தால் எளியேன் கதியென்னே
எந்நாளும் வருந்தமென்றால் என்னேருவனக் காளாகிநிற்பேன்
சாங்கோபாங்கப் புண்ணியத்தாற் றவமேம்லிந்த பெரியோரைத்
[illegible] வழியத்தடுத் தாண்டும்தகைசேர் மனத்திற் குடியிருந்தும்
பாங்கேபுரிவ துன்வழக்கம் பாவிபடும்பா டொழியாயோ
பட்சத்தோடு மனையாயோ பரமே கடைக்கணருள்புரியே.

5. மனத்தையடக்கிநிறுத்திவைத்தால்வழிப்போக்கனைப்போலெனைக்கூட்டி
மறித்துமறித்துப் போராடவதைத்தால் மறுத்துங் குரு[illegible]துவிட்டு
இனத்தைச்சார்ந்தே இழுத்தேகி யேவற்காரன் எஜமான்போல் [illegible]டைக்
எல்லாத்துயர்க்கும் இலக்காக்கி யென்னைப்படுத்தும் பெரு[illegible]ட்
கணத்தைச்சார்ந்த துறவறத்தோய் கண்டுங்காணார் போலிருந்தாற்
கவலைபெரிதே அதைத்தொலைக்கக் கருதும்உபாயம் உனையன்றி
வனத்தில் மலையிற்பெருங்கடலில் வானத்தேனுஞ் சென்றாலும்
வருமோ சுகந்தான் வாராதுமணியே கடைக்கணருள்புரியே.

முற்றிற்று.

நோட்டீஸ்.

இதற்குக் கிரையம் கொடுக்கப் பிரியமிருந்தால் தங்கள் இஷ்டம்போற் கொடுக்கவும். அப்படிக்கொடுப்பதை வேறு புத்தகங்கள் வெளியிடுவதற்கு உபயோகப்படுத்தக்கூடும்.

சங்கரலிங்கம்பிள்ளை,

சற்ஜனசபை காரியதரிசி,

1—5—1914. தூத்துக்குடி.